பிள்ளைகளின் வளர்ப்பு மற்றும் கல்விக்கு பெற்றோரே முக்கிய பொறுப்பு வகிப்பர். உங்கள் பிள்ளையை பாடசாலையில் பதிவது அவர்கள் ஒழுங்காகப் பாடசாலை செல்வது நேரசூசியின்படி வருவது மற்றும் பாடசாலை ஒழுங்குகளை சரிவரக் கடைப்பிடிப்பதற்கு நீங்களே பொறுப்பு வகிப்பீர்கள். பிள்ளைகள் தமது வீட்டுப் பாடங்களை ஒழுங்காக செய்வது குறித்து பெற்றோர் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். சுவிசில் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையேயான சேர்ந்து செயற்படும் நடைமுறை மிக முக்கிய அர்த்தமுள்ளதாக இருப்பதுடன் இதுவும் பாடசாலைக் கல்வியின் ஒருபகுதியாக அமைந்துள்ளது. பெற்றோர் பாடசாலையால் ஒழுங்காக பெற்றோர் கலந்துரையாடலுக்கு மற்றும் பெற்றோர் மாலைச் சந்திப்புகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

➜ மத்திய பாடசாலை

மத்திய பாடசாலை என்பது ஒரு கிம்நாசியம் அல்லது கல்லூரியாகும். இதில் கற்றுத் தேறினால் ஒரு உயர் தகமைச் சான்றிதழ் கிடைக்கும், இதனுடன் ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது உயர்கல்விநிலையத்தில் கற்பதற்கு அனுமதி கிடைக்கும். மத்திய பாடசாலையில் சேர்வதற்கு ஒரு திறமையான சராசரிப் புள்ளிகள் அவசியமாகும்.

SCHULE

Die öffentliche Schule heisst Volksschule, ist obligatorisch und kostenlos. In der Schweiz sind die Kantone für die Volksschule zuständig. Zur Vorbereitung auf die Schule besuchen die vier- bis fünfjährigen Kinder ein bis zwei Jahre lang den Kindergarten. Die Schule schickt den Eltern die Kindergartenanmeldung automatisch zu. Danach folgt die Primarschule (1. bis 6. Klasse). Nach der 6. Klasse erfolgt der Übertritt in die Orientierungsschule oder die kantonale Mittelschule. Offizielle Schulsprache ist Hochdeutsch.

Nach der Orientierungsschule beginnt Ihr Kind eine Berufsausbildung oder besucht eine Mittelschule. Es steht den Eltern frei, ihr Kind statt in die Volksschule in eine private Schule zu schicken. Private Schulen sind kostenpflichtig. Wenn Ihr Kind während der obligatorischen Volksschulzeit eine private Schule besucht, haben Sie die Pflicht, dies der Schulverwaltung Ihrer Wohngemeinde zu melden.

Die Eltern sind hauptverantwortlich für die Erziehung und Ausbildung ihrer Kinder. Sie sind verpflichtet, ihre Kinder einzuschulen und darauf zu achten, dass sie den Schulbesuch, den Stundenplan und die Schulordnung einhalten. Eltern müssen sicherstellen, dass die Kinder ihre Hausaufgaben machen. Die Zusammenarbeit zwischen Schule und Eltern hat in der Schweiz zentrale Bedeutung und ist Teil der Schulbildung. Eltern werden von der Schule regelmässig zu Elterngesprächen und Elternabenden eingeladen.

➜ Mittelschule

Die Mittelschule entspricht dem Gymnasium oder College. Sie führt zu einem Maturitätszeugnis, das zum Studium an allen Universitäten und Fachhochschulen berechtigt. Für den Zugang zur Mittelschule ist ein guter Notendurchschnitt erforderlich.

BILDUNGSSYSTEMATIK



→ டொச் இரண்டாவது மொழியாக (DaZ)

உங்கள் பிள்ளை குறைவான டொச் அறிவுடன் பாடசாலைக்கு சேருமாக இருந்தால், பாடசாலை பல வித்தியாசமான விதங்களில் உதவிகளை வழங்கும். முதல் விடயமாக வழமையான வகுப்பில் உதவி வழங்கப்பட்டு மேலதிக டொச் பாடங்கள் வழங்கப்படும். பிள்ளைக்குத் தகுந்த பொருத்தமான நடவடிக்கைகள் ஆசிரியர்களாலும் DaZ ற்குப் பொறுப்பானவர்களாலும் தீர்மானிக்கப்படும். பாடசாலைகள் குறித்த விபரங்களை மக்கள் பாடசாலை மற்றும் விளையாட்டுகளுக்கான திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

✉ bildungsdirektion@nw.ch
☞ www.nw.ch > DaZ

→ Deutsch als Zweitsprache (DaZ)

Wenn Ihr Kind mit geringen Deutschkenntnissen in die Schule eintritt, bietet die Schule verschiedene Formen der Unterstützung an. In erster Linie werden Kinder in die Regelklasse integriert und erhalten zusätzlich Deutschunterricht. Die passenden Massnahmen werden von der Lehrperson und der Verantwortlichen für DaZ getroffen. Informationen zur Schule erhalten Sie beim Amt für Volksschulen und Sport.

✉ bildungsdirektion@nw.ch
☞ www.nw.ch > DaZ

தொழிற்கல்வி

சுவிஸ் ஒரு மிக வெற்றிகரமான மற்றும் வெளிநாடுகளால் பல வேளைகளில் பின்பற்றப்படும் நடைமுறையான தொழிற்கல்வியைக் கொண்டுள்ளது.

➜ இளையோருக்கான தொழிற்கல்வித் தெரிவு

பெண் தொழில் ஆலோசகி மற்றும் ஆண் தொழில் ஆலோசகர் மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் தொழிற்கல்வித் தெரிவுக்கு உதவிபுரிவர். தனிமையில் ஆலோசனை தேவைப்படின் தொழில் மற்றும் உயர் கல்விக்கான ஆலோசனை பெறுவதற்காக ஒரு தவணையைப் பெற பதிவுசெய்ய வேண்டும். வயதுவந்தவர்கள் புதிதாகத் தொழிற்கல்வி பெற விரும்புவார்களாக இருந்தாலும் இவ்வாறு செய்துகொள்ள வேண்டும்.

✉ biz@nw.ch, ☞ www.netwalden.ch

➜ அடிப்படைத் தொழிற்கல்வி

இளையோர்களில் பெரும்பாலானோர் சுவிசில் ஒரு தொழில் செய்வதற்கான கல்வியை, பெரும்பாலும் ஒரு அடிப்படைக்கல்வியாகப் பெற்றுக்கொள்வார்கள். இதன்போது செய்முறைப் பாடங்களை தொழிற்துறைப் பாடசாலையின் தொழிலகங்களில் பெற்றுக்கொள்வர். தொழிற்கல்வி இறுதிச் சான்றிதழ் தொழில் உலகிற்கான வழியையும் துறைசார் நிபுணத்துவ கற்கைநெறிக்கும் வழியைத் திறக்கின்றது. விசேடமாக ஆர்வம் காட்டும் மற்றும் புத்திசாலிகளான இளையோர் உயர்தொழிற்கல்வித் தகமையை தொழில் உலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தகமையுடன் ஒரு உயர் கல்வி நிலையத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட நிபந்தனையுடன் பல்கலைக் கழகத்திற்குள் நுழைவதற்கான தகுதியையும் பெற்றுக் கொள்ளலாம்.

➜ இணைப்புப்பால வசதிகள்

ளையோர், இடைநிலைத்தரம் ஐ இன் முடிவில் நேரடியாக ஒரு தொழிற்கல்வியை ஆரம்பிக்க இயலாது போனால் அவர்களுக்கு இணைப்புப்பாலம் (Brückenangebote) என அழைக்கப்படும் வேறுசில வழிகளில் வசதி செய்து கொடுக்கப்படும்..

➜ வயதுவந்தோருக்கான தொழிற்கல்வி

வயதுவந்தவர்களும் சுவிசில் ஒரு அங்கீகாரம் உடைய தொழிற்கல்வியை மேற்கொள்ள முடியும். இது அடிப்படை ரீதியான தொழிற்கல்வியாகவோ அல்லது மீளக் கற்றுக்கொள்ளும் முறையாகவோ நடைபெறும். தொடர்ந்து கற்கும் மேலதிக கற்கைநெறிகள் விதந்துரைக்கப்படுகின்றது, இதன்மூலம் தொழிற்சந்தையில் தொழிற்திறனுடன் இருப்பதற்கு இது ஏதுவாக இருக்கும்.

✉ biz@nw.ch, ☞ www.netwalden.ch

வசித்தல்

➜ வீடு தேடுதல்

தற்சமயம் நீங்கள் புதிய வீடு ஒன்றைத் தேடுவதாக இருந்தால், வீடு வாடகைக்குக் கொடுக்கும் விளம்பரங்களை தினசரிப் பத்திரிகையான «Nidwaldner Zeitung», இலவச

BERUFSAUSBILDUNG

Die Schweiz verfügt über ein sehr erfolgreiches und im Ausland mehrfach kopiertes System der Berufsausbildung.

➜ Berufswahl für Jugendliche

Berufsberaterinnen und Berufsberater unterstützen Schülerinnen und Schüler bei der Berufswahl. Für die Einzelberatung ist eine Anmeldung bei der Berufs- und Studienberatung erforderlich. Diese steht auch Erwachsenen zur Verfügung, die sich beruflich neu orientieren wollen.

✉ biz@nw.ch, ☞ www.netwalden.ch

➜ Berufliche Grundbildung

Die Mehrheit der Jugendlichen in der Schweiz macht eine berufsorientierte Ausbildung, meist eine berufliche Grundbildung. Dazu gehört neben der praktischen Ausbildung in einem Betrieb die Berufsfachschule. Der Berufsabschluss öffnet den Weg in die Arbeitswelt und in höhere Fachausbildungen. Besonders interessierte und begabte Jugendliche können an der Berufsfachschule die Berufsmaturität ablegen. Diese ermöglicht ein Studium an einer Fachhochschule und unter bestimmten Voraussetzungen den Zugang zu den Universitäten.

➜ Brückenangebote

Für Jugendliche, denen es im Anschluss an die Sekundarstufe I nicht gelingt, direkt eine Berufsausbildung zu beginnen, stehen so genannte Brückenangebote zur Verfügung.

➜ Ausbildung für Erwachsene

Auch Erwachsene können eine in der Schweiz anerkannte Berufsausbildung machen. Dies kann in Form einer beruflichen Grundbildung oder einer so genannten Nachholbildung geschehen. Sehr empfohlen wird auch der Besuch von Weiterbildungen, damit die Arbeitsmarktfähigkeit bleibt.

✉ biz@nw.ch, ☞ www.netwalden.ch

WOHNEN

➜ Wohnungssuche

Falls Sie eine neue Wohnung suchen, finden Sie Wohnungsinserate in der Tageszeitung «Nidwaldner Zeitung», den Gratisanzeigern

விளம்பரப் பத்திரிகையான «Unterwaldner» அல்லது «Blitz» அல்லது இணையத்தளத்தில் தேடலாம், உதாரணமாக:

☞ www.immoscout24.ch
☞ www.anzeiger.ch

➜ வாடகை ஒப்பந்தம்

வழமையாக ஒரு எழுத்துமூலமான வாடகை ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும், அதில் வாடகை இல்லத்தின் அளவு, வாடகைக் கட்டணம், வெளியேறுவதற்கான அறிவிப்புத் தவணை, வாடகை முற்பணம், பொதுவான நிபந்தனைகள் மற்றும் வீட்டு ஒழுங்குகள் அடங்கியிருக்கும். பொதுவாக வாடகை அடுத்து வரும் மாதத்திற்கு முன்பாகவே செலுத்தப்படும். அநேகமாக வாடகைக் குடியிருப்பாளர்கள் வாடகை தவிர மேலதிக கட்டணங்களையும் செலுத்த வேண்டியிருக்கும், உதாரணமாக வீட்டை வெப்பமேற்றுதல், தண்ணீர் அல்லது கேபிள் தொலைக்காட்சி போன்றவை. உங்கள் வாடகையுடன் மேலதிகக் கட்டணங்கள் சேர்ந்துள்ளதா அல்லது அது இல்லாமலுள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். வீட்டைப் பொறுப்பேற்கும்போது அல்லது அதைவிட்டு வெளியேறும்போது வாடகைக்கு வழங்குபவரோடு சேர்ந்து வீட்டின் நிலமையை பரிசோதிப்பதுடன் ஏதாவது பழுதுகள், குறைகள் இருந்தால் எழுத்துமூலமாக குறிப்பிட்டுக் கொள்ளவும். சிறிய பாதிப்புகள் இருந்தாலும் அவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளவும்.

➜ வானொலி- மற்றும் தொலைக்காட்சிக்- கட்டணம்

வீட்டுவாடகைக்கு மேலதிகமாக ஒவ்வொரு வீட்டாரும் பார்க்கும், கேட்கும் கருவிகளுக்கான கட்டணம் செலுத்த வேண்டும். இதன்மூலம் வானொலி- மற்றும் ∴அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொள்ளலாம். (உதாரணமாக தொலைக்காட்சி, வாகன வானொலி அல்லது கைத்தொலைபேசி).

✉ info@serafe.ch
☞ www.serafe.ch

➜ மின்சாரம்- மற்றும் தண்ணீர் கட்டணங்கள்

மின்சாரம், தண்ணீர் மற்றும் கழிவுநீர் போன்றவற்றிற்கு அவற்றை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஒரு கட்டண விபரத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

➜ ஆண் மற்றும் பெண் அயலவர்கள்

நீங்கள் புதிய வீட்டிற்குக் குடியேறிய பின்பு உங்கள் அயலவர்களுக்கு உங்களை அறிமுகப்படுத்துங்கள். நிட்வல்டென் மக்கள் தங்களை அறிமுகப்படுத்துவதில் சற்று பின்வாங்குபவர்கள் என்றே கணிப்பிடப் படுகின்றது. ஆனால் ஒரு பாரம்பரிய வழக்கமாக அயலவர் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வர். உங்களுக்கும் அவ்வாறே உதவிசெய்வார்கள். உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலோ அல்லது ஏதாவது விளங்காவிட்டால் சாதாரணமாகக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

➜ வீட்டு ஒழுங்குகள்

அநேக வாடகை வீடுகளில் அல்லது- இல்லங்களில் வீட்டு ஒழுங்குமுறை அமுலில் இருக்கும், அதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். உதாரணமாக இரவு அமைதி 22 மணி தொடக்கம் 07 மணிவரை மற்றும் மதிய அமைதி 12 மணி தொடக்கம் 13 மணிவரை கடைப்பிடிக்க வேண்டும். எவராவது விழாக்களைக் கொண்டாட விரும்பினால் அதுகுறித்து அவர்களது அயலாரிடம் தெரிவித்துக் கொள்வது சிறந்தது. அனைவருக்கும் பொதுவான உடுப்புக் கழுவும்

«Unterwaldner» oder «Blitz» oder im Internet. Zum Beispiel:

☞ www.immoscout24.ch
☞ www.anzeiger.ch

➜ Mietvertrag

In der Regel wird ein schriftlicher Mietvertrag abgeschlossen, der den Umfang des Mietobjektes, Mietkosten, Kündigungstermine, Mietkaution, die allgemeinen Bedingungen und die Hausordnung enthält. Die Miete wird im Allgemeinen im Voraus für den nächsten Monat bezahlt. Meist zahlen die Mietenden zusätzliche Nebenkosten, zum Beispiel für Heizung, Wasser oder Kabelfernsehen. Informieren Sie sich, ob Ihre Mietkosten mit oder ohne Nebenkosten angegeben sind. Bei der Wohnungsübergabe beim Ein- und Auszug empfiehlt es sich, gemeinsam mit dem Vermieter den Zustand der Wohnung zu prüfen und allfällige Mängel schriftlich in einem Protokoll festzuhalten. Halten Sie auch kleine Schäden fest.

➜ Radio- und TV-Gebühren

Zusätzlich zur Wohnungsmiete muss jeder Haushalt Empfangsgebühren für Geräte bezahlen, mit denen es möglich ist, Radio- und/oder TV-Programme zu empfangen (zum Beispiel TV, Autoradio oder Handys).

✉ info@serafe.ch
☞ www.serafe.ch

➜ Strom- und Wassergebühren

Für Strom, Wasser und Abwasser erhalten Sie eine Rechnung von den Versorgungsbetrieben.

➜ Nachbarinnen und Nachbarn

Stellen Sie sich nach Ihrem Einzug in die neue Wohnung bei Ihren Nachbarinnen und Nachbarn vor. Das wird geschätzt. Menschen in Nidwalden sind eher zurückhaltend. Es gibt aber eine grosse Tradition, dass sich Nachbarn gegenseitig helfen. Auch Ihnen wird geholfen. Fragen Sie einfach, wenn Sie Hilfe brauchen oder etwas nicht verstehen.

➜ Hausordnung

In den meisten Mietshäusern oder -wohnungen gibt es eine Hausordnung, die beachtet werden muss. Beispielsweise ist die Nachtruhe von 22 bis 07 Uhr und die Mittagsruhe von 12 bis 13 Uhr einzuhalten. Wer Feste feiern will, kündigt dies am besten bei seinen Nach-

அறையைப் பாவிப்பதற்கு அநேகமாக ஒரு பாவிக்கும் ஒழுங்குமுறை வைக்கப்பட்டிருக்கும்.

→ வீட்டுப் பொருட்களுக்கான காப்புறுதி மற்றும் சேதங்களுக்கான பாதுகாப்புக் காப்புறுதி

வீட்டுப் பொருட்களுக்கான காப்புறுதி மற்றும் சேதங்களுக்கான பாதுகாப்புக் காப்புறுதி சுவிசில் கட்டாயமானது அல்ல, ஆனால் விதந்துரைக்கப்படுகின்றது. வீட்டுப் பொருட்களுக்கான காப்புறுதி வீட்டுப் பொருட்கள் நெருப்பால், தண்ணீரால், களவால் மற்றும் கண்ணாடி உடைப்பால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு நிவாரணம் அளிக்கும். சேதங்களுக்கான பாதுகாப்புக் காப்புறுதி பொருட்கள்- மற்றும் நபர்களுக்கு காப்புறுதி செய்யப்பட்டவரால் ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமாயின் நிவாரணம் அளிக்கும். காப்புறுதி நிறுவனங்களுக்கு இடையே இதற்கான கட்டணங்களை இலகுவாக ஒப்பிட்டுக்கொள்ள பின்வரும் இணையத்தளத்தைப் பார்க்கவும்

☞ www.comparis.ch

→ பொருட்களுக்கான கட்டாயக் காப்புறுதி

நிட்வல்டெனில் பொருட்களுக்கான கட்டாய காப்புறுதி ஒன்று உள்ளது. நிட்வல்டென் பொருட்களுக்கான காப்புறுதி NSV கட்டிடங்கள் மற்றும் வாகனம் செலுத்துதல் போன்றறின்போது தீ ஏற்படுதல் மற்றும் அடிப்படை இயற்கை ஆபத்துகளுக்கெதிராக காப்பீடு வழங்குகின்றது. போன்றவற்றிற்கு காப்புறுதி வழங்குகின்றது. இதற்கான விண்ணப்பப் படிவத்தை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து நீங்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்வீர்கள்.

☞ www.sichere-sache.ch

→ குப்பை அகற்றுதல்

குப்பைகள் அதற்குரிய விதத்தில் பிரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன. விற்பனை நிலையங்கள் PET- போத்தல்கள், மின்கலன்கள் மற்றும் பிளாஸ்ரிக் சுற்றுறைகளை திரும்பவும் எடுத்துக் கொள்வார்கள். நகரத்தில் ஒரு குப்பை சேகரிக்கும் நிலையம் உள்ளது, கண்ணாடிப் போத்தல்கள், அலுமினியப் பேணிகள் மற்றும் வேறு பழைய பொருட்கள் இங்கு கொடுத்து அகற்றலாம். கடதாசி மற்றும் மடல்கள் ஒரு குறிப்பிட்ட தவணையில் வீட்டிற்கு முன்பாக எடுத்துச் செல்லப்படும். எஞ்சிய வீட்டுக் குப்பைகள் கட்டணம் செலுத்தும் குப்பைப் பைகளில் அகற்றப்படும். இந்தக் குப்பைப் பைகளை விற்பனை நிலையங்களில் அல்லது தபால் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். அநேக நகரங்கள் குப்பை அகற்றும் ஒரு கலண்டரை அனுப்பி வைப்பார்கள். அதில் சரியாக எந்த நாட்களில் மற்றும் எந்த நேரங்களில் குப்பை அகற்றப்படும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும்.

☞ www.suibr.ch

சுகாதாரம்

சுவிசின் சுகாதார ஒழுங்குமுறை சிக்கல் நிறைந்ததுடன் உள்நாட்டு மக்களாலேயே இலகுவாக எளிதில் விளங்கிக்கொள்ள முடியாதது. சுகாதார வழிகாட்டியான சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் பல தகவல்களை வழங்குகின்றது. இது மத்திய சுகாதார அமைச்சின் உத்தரவிற்கமைய ஏற்படுத்தப்பட்டதுடன் சுவிசில் வாழும் ஆண் பெண் குடியேற்றவாசிகளுக்கு சுகாதாரப் பராமரிப்பையும் நோய்- மற்றும் விபத்துக் காப்புறுதி அதேபோன்று சுகாதாரத்தைப் பேணும் வசதிகள் மற்றும் முற்பாதுகாப்பை வழங்குகின்றது. இந்த சுகாதார வழிகாட்டியை

barn an. Für die Nutzung einer gemeinsamen Waschküche gibt es in den meisten Fällen einen Benutzungsplan.

→ Hausratversicherung und Privathaftpflichtversicherung

Hausratversicherung und Privathaftpflichtversicherung sind in der Schweiz nicht obligatorisch, aber empfehlenswert. Die Hausratversicherung vergütet Schäden am Hausrat, die durch Feuer, Wasser, Diebstahl und Glasbruch entstehen. Die Privathaftpflichtversicherung vergütet Sach- und Personenschäden, welche die versicherte Person verursacht. Einen einfachen Prämienvergleich zwischen den Versicherungen finden Sie unter

☞ www.comparis.ch

→ Obligatorische Sachversicherung

Nidwalden hat eine obligatorische Sachversicherung. Die Nidwaldner Sachversicherung NSV versichert Gebäude und Fahrhaben gegen Feuer- und Elementarrisiken. Sie erhalten die Anmeldeformulare direkt von der Versicherung zugestellt.

☞ www.sichere-sache.ch

→ Abfallentsorgung

Der Abfall wird getrennt entsorgt. Verkaufsstellen nehmen PET-Flaschen, Batterien und Plastikverpackungen zurück. In den Gemeinden gibt es Abfallsammelstellen, an denen Sie Glasflaschen, Aluminiumdosen und andere Altstoffe entsorgen können. Papier und Karton werden zu bestimmten Terminen vor dem Haus abgeholt. Der Restabfall wird in gebührenpflichtigen Abfallsäcken entsorgt. Diese Abfallsäcke erhalten Sie an der Kasse der Supermärkte oder am Postschalter. Viele Gemeinden verschicken einen Abfallkalender mit den genauen Sammeldaten und -zeiten.

☞ www.suibr.ch

GESUNDHEIT

Das Schweizer Gesundheitswesen ist komplex und auch für Einheimische nicht immer leicht zu verstehen. Der Gesundheitswegweiser des Schweizerischen Roten Kreuzes liefert viele Informationen. Er ist im Auftrag des Bundesamts für Gesundheit entwickelt worden und möchte in der Schweiz lebenden Migrantinnen und Migranten den Zugang zu Gesundheits-

கீழுள்ள இணையத்தள முகவரியில் நீங்கள் காணலாம்.

☞ www.migesplus.ch

→ மருத்துவ உதவி

சுவிசில் நீங்கள் வைத்தியரை விருப்பம்போல் தெரிவுசெய்யலாம். நீங்கள் தெரிவுசெய்த மருத்துவக்காப்புறுதி-வகையின்படி சிலவேளைகளில் குறிப்பிட்ட ஆண், பெண் வைத்தியர்களிடமே செல்லவேண்டும் என்ற நிபந்தனை இருக்கலாம். வைத்தியப் பராமரிப்பு முன்னுரிமையாக குடும்ப வைத்தியராலேயே மேற்கொள்ளப்படும். தேவைப்படின் நீங்கள் வைத்திய நிபுணர்களிடம் அனுப்பிவைக்கப் படுவீர்கள். ஆண், பெண் குடும்ப வைத்தியர்களின் முகவரிகளை தொலைபேசிப் புத்தகத்தில் நீங்கள் காணலாம்.

☞ www.local.ch > Ärzte

இரவுகளில் மற்றும் வாரஇறுதி நாட்களில் ஒரு வைத்திய அவசரசேவைப் பகுதி கடமையில் இருக்கும். அவசர ஆபத்துவேளைகள் அல்லது வைத்தியநிலைய சிகிச்சை தேவைப்பட்டால், வைத்திசாலையில் வைத்துப் பராமரிக்கப்படுவீர்கள்.

→ மருத்துவக் காப்புறுதி: அடிப்படைக் காப்புறுதி

அடிப்படைக் காப்புறுதி என்றழைக்கப்படும் கட்டாய நோய்பராமரிப்புக் காப்புறுதி நோய்வாய்ப்படல், விபத்து மற்றும் தாய்மை விடுமுறையிலிருத்தல் போன்றனவற்றின் பொழுது சட்டரீதியான அடிப்படைச் சேவைகளை உள்ளடக்குகின்றது. சுவிசில் வசிக்கும் ஒவ்வொருவர்க்கும் இவ் அடிப்படைக் காப்புறுதி கட்டாயமானது என்பதுடன் வயது, பூர்வீதம் மற்றும் வதிவிட அந்தஸ்து என்பதில் தங்கியிருக்காது இதைச் செய்து கொள்ள வேண்டும். குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்கு உள்ளாக அல்லது சுவிசில் வசிப்பதற்கு ஆரம்பித்த உடனடியாக விண்ணப்பிக்கும் தவணை உள்ளது. சுவிசில் 50 க்கு மேற்பட்ட மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொரு மருத்துவக் காப்புறுதியும் அடிப்படைக் காப்புறுதியாக ஒரேவிதமான பராமரிப்பை வழங்கும். இவை ஒவ்வொன்றும் வழங்கும் சேவைகளில் வேறுபடுகின்றன. மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் அனைத்து நபர்களையும் அடிப்படைக் காப்புறுதியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

→ மருத்துவக் காப்புறுதி நிறுவனம்: சொந்த விருப்பில் மேலதிக காப்புறுதிகள்

அடிப்படைக் காப்புறுதியை விட மேலதிகமாக சுயவிருப்பத்தின் பேரில் மேலதிக காப்புறுதிகளைச் செய்து கொள்ள முடியும், உதாரணமாக பிள்ளைகளுக்குப் பற்களை சரிசெய்வது, மூக்குக் கண்ணாடி மற்றும் கண் வில்லைகள், சிகிச்சை நிலையத்தில் அரைவாசி தனியார் அல்லது முழுமையாகத் தனியார் பகுதியில் சிகிச்சை பெறல், வைத்திய நிலையத்தில் விரும்பிய வைத்தியரைத் தெரிவுசெய்வது அல்லது மாற்று வைத்திய சிகிச்சை பெறுவது போன்றவை. மேலதிக காப்புறுதிகளுக்கு வேறாகக் கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மேலதிக விடயங்களுக்கு நீங்கள் காப்புறுதி செய்யும்போது அதற்கான கட்டணங்களும் அதிகரிக்கும். மேலதிக தகவல்களுக்கு நீங்கள் மருத்துவக்காப்புறுதியை நாடுங்கள்.

→ மருத்துவக் காப்புறுதி நிறுவனக் கட்டணம்

மருத்துவக் காப்புறுதிக்கு (அடிப்படையில் மாதாந்தம்) காப்புறுதி செய்த நபரினால் இப் பிறேமியக் கட்டணம் செலுத்தப்படுகின்றது. 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு சட்டப்படி மருத்துவக் காப்புறுதி நிதியங்கள் மிகவும் குறைவான கட்டண சேவையை வழங்க

versorgung, Kranken- und Unfallversicherung sowie zu Angeboten der Gesundheitsförderung und Prävention erleichtern. Den Gesundheitswegweiser finden Sie unter

☞ www.migesplus.ch

→ Medizinische Hilfe

Sie haben in der Schweiz freie Arztwahl. Je nach gewähltem Krankenkassen-Modell kann die Wahlfreiheit jedoch auf bestimmte Ärzte und Ärztinnen beschränkt sein. Die ärztliche Versorgung wird in erster Linie durch Hausärztinnen und Hausärzte sichergestellt. Bei Bedarf werden Sie an Spezialisten verwiesen. Adressen von Hausärztinnen und Hausärzten finden Sie im Telefonverzeichnis.

☞ www.local.ch > Ärzte

Während der Nacht und am Wochenende besteht ein ärztlicher Notfalldienst (041 610 81 61). In dringenden Notfällen oder wenn ein Aufenthalt im Spital nötig ist, werden Sie in den Krankenhäusern ärztlich versorgt.

→ Krankenkasse: Grundversicherung

Die obligatorische Krankenpflegeversicherung, auch Grundversicherung genannt, deckt die gesetzlichen Grundleistungen im Fall von Krankheit, Unfall und Mutterschaft. Sie ist für jede in der Schweiz wohnhafte Person obligatorisch, unabhängig von Alter, Herkunft und Aufenthaltsstatus. Die Anmeldefrist beträgt drei Monate nach Geburt oder Wohnsitznahme in der Schweiz. In der Schweiz gibt es über 50 Krankenkassen. Jede Krankenkasse bietet in der Grundversicherung die gleichen Leistungen an, sie unterscheiden sich aber im Serviceangebot. Die Krankenkassen müssen jede Person in die Grundversicherung aufnehmen. Sie können die Krankenkasse frei wählen.

→ Krankenkasse: Freiwillige Zusatzversicherungen

Die Zusatzversicherung kann freiwillig, zusätzlich zur Grundversicherung abgeschlossen werden; zum Beispiel für Zahnstellungskorrekturen bei Kindern, Brillen und Kontaktlinsen, für die stationäre Behandlung in der halbprivaten oder privaten Abteilung, die freie Arztwahl im Spital oder für alternativmedizinische Therapien. Zusatzversicherungen müssen separat bezahlt werden. Je mehr Leistungen Sie versichern, umso teurer wird die Prämie. Für weitere Informationen wenden Sie sich an die Krankenkassen.

வேண்டும். இளம் வயது வந்தவர்க்கு (19 தொடக்கம் 25 வயதுவரை) மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் குறைந்தளவு கட்டணங்களைப் பெற்றுக்கொள்ளும். ஒவ்வொரு வருடமும் மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் கட்டணத்தின் தொகை எவ்வளவென நிச்சயிக்கின்றன. ஒருவரின் வதிவிடம், வயது, காப்புறுதியின் வகை மற்றும் வருடப் பங்களிப்புக் கட்டணத்தின் தொகை என்பவற்றில் இது தங்கியுள்ளது. கட்டணத் தொகையை ஒப்பிட்டுப் பார்த்தல் பயனுள்ளதாகும்.

☞ www.priminfo.admin.ch/de/praemien

நீங்கள் விரும்பியவாறு தெரிவுசெய்வதற்காக, மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் பல வித்தியாசமான சேமிக்கும் திட்டங்களை வழங்குகின்றன. வருடாந்த பங்களிப்புக் கட்டணத் தொகை அல்லது மாற்றீடான காப்பீட்டு வகை

(குடும்பவைத்தியர் வகை HMO (Health Maintenance Organization) அல்லது Telmed. இவ்வாறான வித்தியாசமான காப்புறுதி வகைகள் குறித்து நேரடியாக உங்கள் மருத்துவக் காப்புறுதி நிலையத்திடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

கட்டணத்தைச் சேமிப்பற்காக உங்கள் மருத்துவக் காப்புறுதியை மாற்றிக்கொள்வதற்கு வசதியுள்ளது. முக்கியம்: இதன்படி நீங்கள் விலகிக்கொள்வது செல்லுபடியாவதற்கு, குறைந்தது கார்த்திகை மாதத்தின் கடைசி வேலைநாளுக்கு முன்பாக உங்கள் காப்புறுதி நிறுவனத்தை விண்ணப்பம் சென்றடைந்திருக்க வேண்டும். நீங்கள் பாரம்பரிய முறையிலான காப்புறுதி வகையை, அதாவது சட்டபூர்வமான 300 பிராங்குகள் செலுத்தி குறைந்தளவிலான கட்டணத்துக்கு காப்புறுதி செய்திருப்பின், ஆனி மாதக் கடைசியில் விலகுதல் சாத்தியமாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் விலகல் கடிதமானது குறைந்த பட்சம் பங்குனி மாதத்தின் கடைசி வேலைநாளன்று காப்புறுதி நிறுவனத்தைச் சென்றடைய வேண்டும். விண்ணப்பத்தை மருத்துவக் காப்புறுதி நிறுவனத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வையுங்கள்.

➜ கட்டணத்தில் பங்களிப்பது (வருடப் பங்களிப்புக் கட்டணம், சொந்தமாகச் செலுத்துவது மற்றும் வைத்தியசாலைக் கட்டணம்)

காப்புறுதிபெறுநர் அடிப்படைக் காப்புறுதிக் கட்டமைப்பின் கீழ் மருத்துவ சேவைக்கான செலவுகளில் (மருத்துவர், வைத்தியசாலை, மருந்துகள்) பங்குபற்ற வேண்டுமென சுவிஸ் சட்ட வரையறை கூறுகின்றது:

வருடப் பங்களிப்புக் கட்டணம்: காப்புறுதி நிறுவனம் ஈட்டுத்தொகையை பொறுப்பேற்கு முன் காப்புறுதி பெறுநரால் செலுத்தப்பட வேண்டிய தொகை (குறைந்த பட்சம் வளந்தவர்க்கு 300 பிராங்குகள், பிள்ளைகளுக்கு 0 பிராங்குகள்)

சொந்தமாக பொறுப்பேற்கும் தொகைக் (கழிவுத் தொகை): வருடாந்த கட்டணத்தொகைக்கு மேலாக செலவிடப்பட்ட மருத்துவச் செலவுகள் அதிகரிக்குமாயின், மருத்துவக்காப்புறுதி நிறுவனம் சேவைவழங்குநரின் ஈட்டுத்தொகையை பொறுப்பேற்கின்றது. காப்புறுதி பெறுநர் தொடர்ந்தும் 10 வீதமான செலவுத்தொகையை (ஆகக்கூடியது 700 பிராங்குகள் வருடத்தில்) பொறுப்பேற்கின்றார். இந்தத் தொகை சொந்தமாக பொறுப்பேற்கும் தொகை எனப்படுகின்றது.

வைத்தியசாலை செலவுத் தொகை: வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்பொழுத சிகிச்சைச் செலவுகள் மற்றும் தங்கியிருத்தலுக்கும் உணவுகளுக்குமான செலவுகள் அடிப்படைக் காப்புறுதியினுள் அடங்குகின்றன. ஆயினும் மருத்துவக் காப்புறுதிச் சட்டம் வைத்தியசாலைக் கட்டணம் ஒன்று செலுத்தப்பட வேண்டுமென வேண்டி நிற்கின்றது. 26 வயதுக்கு மேற்பட்ட காப்புறுதி

➜ Krankenkassenprämien

Die Prämie wird (im Prinzip monatlich) vom Versicherten an die Krankenkasse bezahlt. Laut Gesetz müssen alle Krankenkassen eine tiefere Prämie für Kinder bis zum 18. Altersjahr anbieten. Bei den jungen Erwachsenen (19 bis 25 Jahre) kann die Krankenkasse eine reduzierte Prämie anbieten. Jedes Jahr legen die Krankenkassen die Höhe der Prämien fest. Die Höhe der Prämien (Beiträge) ist abhängig von Wohnort, Alter, Versicherungsmodell und Franchise. Es lohnt sich, die Prämien zu vergleichen.

☞ www.priminfo.admin.ch/de/praemien

Krankenkassen bieten verschiedene Sparmöglichkeiten an, die Sie frei wählen können: Die Höhe der Jahresfranchise oder die Wahl eines alternativen Versicherungsmodells (Hausarztmodell, HMO [Health Maintenance Organization]) oder Telmed. Informieren Sie sich direkt bei Ihrer Krankenkasse über die verschiedenen Versicherungsmodelle.

Sie haben zudem die Möglichkeit, Ihre Krankenkasse zu wechseln, um Prämien zu sparen. Wichtig: Die Kündigung muss spätestens am letzten Arbeitstag im November bei Ihrer Krankenkasse eintreffen. Wenn Sie im traditionellen Modell, mit der gesetzlichen Mindestfranchise von 300 Franken versichert sind, ist auch eine Kündigung auf Ende Juni möglich. Dann muss die Kündigung spätestens am letzten Arbeitstag im März eintreffen. Schicken Sie die Kündigung per Einschreiben an die Krankenkasse.

➜ Kostenbeteiligung (Franchise, Selbstbehalt und Spitalbeitrag)

Die schweizerische Gesetzgebung bestimmt, dass die Versicherten sich im Rahmen der Grundversicherung an den Gesundheitskosten (Arzt, Spital und Medikamente) beteiligt:

Franchise: Der vom Versicherten zu zahlende Betrag, bevor die Versicherung die Vergütung übernimmt (mindestens 300 Franken für Erwachsene, 0 Franken für Kinder).

Selbstbehalt: Sobald die beanspruchten Gesundheitskosten den Betrag der Franchise überschreiten, übernimmt die Krankenkasse die Vergütung der Leistungserbringer. Der Versicherte trägt jedoch weiterhin 10 Prozent der Rechnungsbeträge (maximal 700 Franken pro Jahr): Dieser Anteil wird Selbstbehalt genannt.

Spitalkostenbeitrag: Bei einem Spitalaufenthalt sind die Behandlungskosten und die Kos-

பெறுநர் ஒரு நாளுக்கு 15 பிராங்குகள் என்றவாறு செலுத்துவர். சிறுபிள்ளைகள் மற்றும் இளவயதினருடன் தாய்மைத்துவத்திலுள்ள பெண்கள் போன்றவர்கள் மேற்படி பணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

➜ கட்டணம் செலுத்துவதற்கான மாநிலத்தின் உதவி

காப்புறுதி செய்தவர்கள், குறைந்த வருமானத்தில் வாழ்பவர்களாக இருந்தால், மருத்துவக் காப்புறுதி செலுத்துவதற்காக ஒரு உதவித் தொகையைப் பெறுவதற்கு உரிமையுள்ளது. இதற்காக நிட்வல்டெனின் சமநிலைப்படுத்தும் நிதியத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்.

✉ info@aknw.ch, ☞ www.aknw.ch

➜ விபத்துக் காப்புறுதி

சுவிசில் தொழில் புரியும் அனைத்து ஊழியர்களும் அவர்கள் தொழில்புரியத் தொடங்கிய 1வது நாள் தொடக்கம் கட்டாயமாக விபத்து மற்றும் தொழிலால் ஏற்படும் நோய்களுக்காகக் காப்புறுதி செய்யப்படுகின்றனர். நீங்கள் கிழமைக்கு 8 மணித்தியாலங்களுக்கு மேலாக வேலை செய்வீர்களாக இருந்தால், தொழிலகத்துக்கு வெளியிலும் விபத்துக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளீர்கள். அத்துடன் இல்லங்களில் வேலை செய்பவர்கள், வீட்டு உதவி செய்பவர்கள் மற்றும் சுத்தம் செய்யும் நபர்களும் தொழில் வழங்குபவர்களால் காப்புறுதி செய்யப்பட வேண்டும். தொழில் இழந்த நபர்கள் அடிப்படையில் தொடர்ந்தும் கட்டாய காப்புறுதி சய்யப்பட்டிருப்பர். சொந்தமாகத் தொழில் செய்வோர், குடும்ப நிறுவனங்களில் தொழில் செய்வோர் சொந்த விருப்பத்தில் தொழில் விபத்துக் காப்புறுதி செய்து கொள்வர். தொழில் செய்யாத நபர்கள் அதாவது வீட்டிலிருக்கும் பெண்கள் மற்றும் ஆண்கள், பிள்ளைகள், உயர்கல்வி கற்பவர்கள், ஓய்வூதியம் பெறும் ஆண்கள் மற்றும் பெண்கள் காப்புறுதி செய்யப்படாதவர்கள். இவர்கள் கட்டாய மருத்துவபராமரிப்புக் காப்புறுதியில் விபத்துக்கெதிராக காப்புறுதி செய்து கொள்ள வேண்டும்.

➜ முதியோர்- மற்றும் தொழில் செய்ய இயலாதவர்கள் காப்புறுதி, தொழில் ரீதியான முற்பராமரிப்பு

சுவிசில் முதியோர் முற்பராமரிப்பைப் பொறுத்தவரை ஒரு வித்தியாசமான திட்டத்தைக் கொண்டுள்ளதுடன், நோய் மற்றும் தொழில் செய்ய இயலாத நிலையில் அவர்களுக்கு தகுந்த உதவிகளை வழங்குகின்றது. விபரமான தகவல்களை சமநிலைப்படுத்தும் நிட்வல்டெனின் நிதியத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

✉ info@aknw.ch, ☞ www.aknw.ch

வரிகள்

சுவிசில் பொதுப்பணிச் சேவைகளான உள்கட்டமைப்பு, போக்குவரத்து, இராணுவம், காவல்துறை, கல்வி/பாடசாலை, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும்

ten für Unterkunft und Verpflegung durch die Grundversicherung gedeckt. Das Krankenversicherungsgesetz verlangt jedoch einen Spitalkostenbeitrag. Versicherte ab 26 Jahren bezahlen einen Beitrag von 15 Franken pro Tag. Kinder und junge Erwachsene in Ausbildung unter 26 Jahren sowie Frauen im Fall der Mutterschaft sind von diesem Beitrag befreit.

➜ Kantonale Prämienverbilligungen

Versicherte, die in bescheidenen finanziellen Verhältnissen leben, haben Anspruch auf eine Verbilligung ihrer Krankenkassenprämien. Die Anmeldung erfolgt bei der Ausgleichskasse Nidwalden.

✉ info@aknw.ch, ☞ www.aknw.ch

➜ Unfallversicherung

Alle in der Schweiz beschäftigten Arbeitnehmenden sind ab dem 1. Tag ihrer Arbeitsaufnahme obligatorisch gegen Unfälle und Berufskrankheiten versichert. Falls Sie mehr als acht Stunden pro Woche arbeiten, sind Sie auch bei Nichtbetriebsunfällen versichert. Auch Heimarbeitende, Haushalthilfen und Putzpersonal in Privathaushalten müssen durch die Arbeitgebenden versichert werden. Arbeitslose Personen sind weiterhin grundsätzlich obligatorisch versichert. Selbstständigerwerbende Personen und Familienmitglieder, die im Familienbetrieb mitarbeiten, sollten sich freiwillig in der beruflichen Unfallversicherung versichern lassen. Nicht versichert sind nicht erwerbstätige Personen wie Hausfrauen und Hausmänner, Kinder, Studierende, Rentnerinnen und Rentner. Sie müssen sich in der obligatorischen Krankenpflegeversicherung gegen Unfall versichern.

➜ Alters- und Invalidenversicherung, berufliche Vorsorge

Die Schweiz verfügt über ein differenziertes System zur Altersvorsorge und bietet Unterstützung bei Krankheit und Invalidität. Detaillierte Informationen erhalten Sie bei der Ausgleichskasse Nidwalden.

✉ info@aknw.ch, ☞ www.aknw.ch

STEUERN

In der Schweiz werden die Kosten für die öffentlichen Leistungen wie Infrastruktur, Verkehr, Armee, Polizei, Bildung/Schule, Gesundheit, so-

விளையாட்டு போன்றவைகளுக்கான செலவு முக்கியமாக தனிநபர்களின் வருமானவரி மற்றும் சொத்துவரிகளிலிருந்தும், நிறுவனங்களுக்கான வரிகளிலிருந்தும், விற்பனை வரிகளிலிருந்தும் செலவுசெய்யப்படுகின்றது.

➜ வருமானவரி

சுவிசில் வருமானவரி மத்திய (நேரடியான மத்திய அரசவரி) மற்றும் மாநில, நகர (மாநில- மற்றும் நகரவரி) வரிகளாகப் அறவிடப்படுகின்றது. வரியின் அளவு வருடாந்த வருமான அறிவித்தலின்போது தீர்மானிக்கப்படும். மாநில இறைவரி அலுவலகம் சாதாரணமாக மாசி மாதத்தில் ஒவ்வொரு வருடமும் வரி விளக்க அறிக்கையை அனுப்புகின்றது. வரி விளக்க அறிக்கை எவ்வாறு நிரப்பி கையளிக்கப்பட வேண்டுமென வழிகாட்டியில் விபரிக்கப்பட்டுள்ளது. 2020 இலிருந்து முற்றிலும் எண்முறைப்பரிமாற்றம் (டிஜிற்றல்) மூலமாக வரி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்படல் சாத்தியமாகும்.

➜ Quellensteuer (குவெலென் வரி)

வரி செலுத்தும் கடமையுள்ள குறிப்பிட்ட நபர்களுக்கு வரி நேரடியாக ஊதியத்திலிருந்து கழிக்கப்படும். இப்படியான தருணங்களில் வரி நேரடியாக தொழில் வழங்குனரால் செலத்தப்படும். வரி செலுத்தும் கடமையுள்ளவர் வரிகள் கழிக்கப்பட்ட தொகையையே ஊதியமாகப் பெறுவார். இது விசேடமாக சுவிசில் வசிக்கும்

Niederlassungsbewilligung (வதிவிடவிசா) இல்லாத வெளிநாட்டு ஊழியர்களுக்கு இவ்விதமான முறைகள் கையாழப்படும.

☞ www.steuern-nw.ch

பயணம் செய்வது

➜ கால்நடையாக மற்றும் மிதிவண்டியில் பயணிப்பது

மிதிவண்டி (வெலோ) சுவிசில் மிகவும் விரும்பத்தக்கது. மிதிவண்டி ஓடுவதற்கான வழிகள் தெளிவாக வரையப்பட்டுள்ளதுடன், இதன்மூலம் மிதிவண்டி ஓட்டுநர்கள் பாதுகாப்பாக ஓடிக்கொள்ள முடியும். நீங்கள் மூன்றாம் நபருக்கு மிதிவண்டியால் பாதிப்பை ஏற்படுத்தினால் அதைப் பொறுப்பேற்பதற்காக, சொந்தத் தவறால் ஏற்படும் பாதிப்புகளுக்கான காப்புறுதியை செய்துகொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. அத்துடன் கால்நடையாக செல்பவர்களும் போக்குவரத்தின்போது இயலுமானவரை பாதுகாப்பாக செல்லவேண்டும். கால்நடையாகச் செல்லும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வீதிகளில் வரையப்பட்டுள்ள வரிக்கோடுகளில் நடப்பதற்கு முன்னுரிமையுண்டு.

☞ www.pro-velo.ch

➜ பொதுப் போக்குவரத்து

சுவிஸ் உலகளவில் மிக நெருக்கமான பொதுப் போக்குவரத்துச் சேவையைக் கொண்டுள்ளது. அனைத்து நகரங்களும் இந்த வலைப் பின்னலில் இணைக்கப்பட்டுள்ளன. ர்யடடிவயஒ-புடிழநெஅநவெ எனும் பயணச் சீட்டுடன் சுவிஸ் மத்திய தொடரூந்துச்சேவையிலும் (ளுஉடீ)இ மாதாந்த- அல்லது வருடப் பயணச்சீட்டுடன்

ziale Sicherheit, Kultur und Sport hauptsächlich aus den Einkommens- und Vermögenssteuern der Privatpersonen, der Besteuerung der Unternehmen und der Mehrwertsteuer bezahlt.

➜ Einkommenssteuern

Einkommenssteuern werden in der Schweiz sowohl vom Bund (direkte Bundessteuer) als auch von den Kantonen und Gemeinden (Kantons- und Gemeindesteuern) erhoben. Die Höhe der Steuern wird anhand einer jährlichen Steuererklärung festgestellt. Das Kantonale Steueramt verschickt in der Regel jährlich im Februar die Steuererklärung. In der Wegleitung ist beschrieben, wie die Steuererklärung auszufüllen und einzureichen ist. Ab 2020 ist eine vollständig digitale Erstellung und Einreichung der Steuern möglich.

➜ Quellensteuer

Bei gewissen steuerpflichtigen Personen werden die Steuern direkt vom Lohn abgezogen. In diesem Fall werden die Steuern direkt vom Arbeitgeber bezahlt. Der Steuerpflichtige erhält eine um den Steuerbetrag gekürzte Lohnauszahlung. Dies betrifft insbesondere ausländische Angestellte, die in der Schweiz leben und nicht im Besitz einer Niederlassungsbewilligung sind.

☞ www.steuern-nw.ch

MOBILITÄT

➜ Zu Fuss und mit dem Velo unterwegs

Das Fahrrad (Velo) ist in der Schweiz beliebt. Velowege sind gut markiert, damit sich Velofahrer sicher fortbewegen können. Es wird empfohlen, eine Haftpflichtversicherung abzuschliessen, die Sie bei Schäden gegenüber Dritten mit dem Velo versichert. Auch wer zu Fuss unterwegs ist, soll möglichst sicher durch den Verkehr kommen. Fussgängerinnen und Fussgänger haben auf Zebrastreifen grundsätzlich Vortritt.

☞ www.pro-velo.ch

➜ Öffentlicher Verkehr

Die Schweiz verfügt über eines der weltweit dichtesten öffentlichen Verkehrsnetze. Alle Gemeinden sind an dieses Netz angeschlossen. Mit einem Halbtax-Abonnement der Schweizerischen Bundesbahnen (SBB), Mehrfahrtenkarten, Monats- oder Jahreskarten können Sie

தொடருந்துகள், பேருந்துகள் மற்றும் கப்பல்களில் முழு சுவிசிலும் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்யலாம்.

☞ www.passepartout.ch
☞ www.sbb.ch

➜ வாகனம் / மோட்டார் சைக்கிள்

வெளிநாட்டு சாரதிப்பத்திரத்தை சுவிசிற்கு வருகை தந்த நாளில் இருந்து ஒரு வருடத்திற்குள் ஒரு சுவிஸ் சாரதிப்பத்திரமாக மாற்றிக்கொள்ள வேண்டும். தற்சமயம் நீங்கள் வெளிநாட்டில் ஒரு வாகனத்தை வைத்திருந்து அதை சுவிசிற்கு இறக்குமதி செய்ய விரும்பினால், சுவிசிற்கு வந்து ஒரு வருடத்திற்குள் அந்த வாகனத்தை மீளவும் சுவிசில் பதிவுசெய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்கள் மற்றும் தேவைப்படும் படிவங்களை போக்குவரத்துப் பாதுகாப்பு நடுநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

✉ info@vsz.ch, ☞ www.vsz.ch

➜ வாகனத்தை பரிமாறிக்கொள்வது

வாகனத்தைப் பரிமாறிக்கொள்வது என்பது ஒன்று அல்லது பல வாகனங்களை பலரும் ஒன்றுசேர்ந்து பாவிக்கும் ஒரு ஒழுங்குமுறையாகும். இவ்வாறான வாகனப் பரிமாற்ற-அமைப்புக்களை சுவிஸ் முழுவதும் நீங்கள் காணலாம். வாகனத்தை வாடகைக்கு எடுக்காமல் வித்தியாசமாக வாகனங்களை குறுகிய நேரத்திற்கு உதாரணமாக மணித்தியால ரீதியாக பாவனைக்குப் பெற்றுக்கொள்ளலாம். பெரிய நிறுவனமாக ஆழடிடைவல உள்ளது, இவர்களிடம் 2900 மேற்பட்ட வாகனங்கள் உள்ளது.

☞ www.mobility.ch

➜ வமிதிவண்டிகளைப் பகிர்ந்து கொள்ளல் (Fahrradsharing)

நிட்வல்டெனின் அனேக குடியிருப்புக்களில் மிதிவண்டிகள் வாடகைக்கு விடப்படுகினறன. இதற்கு நீங்கள் «Nextbike»-App மூலமாகப் பதிவுசெய்ய வேண்டும். வாடகைச் செலவு ஒரு மணித்தியாலத்துக்கு 2 பிராங்குகள் ஆகும்.

☞ www.nextbike.ch

முகவரிகள் மற்றும் அவசரவேளை இலக்கங்கள்

➜ அவசரவேளை இலக்கங்கள்

பொலிஸ்	✆ 117/112
தீயணைப்பு	✆ 118/112
மருத்துவ அவசர அழைப்பு	✆ 144
நஞ்சடையும் அவசரவேளைகளில	✆ 145
காப்பாற்றும் உலங்குவானூர்தி REGA	✆ 1414

➜ முகவரிகள்

சுகாதாரத்தை ஊக்குவித்தல் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதல்
Marktgasse 3, 6371 Stans
✆ 041 618 75 90
✉ gfi@nw.ch
☞ www.nw.ch/gfi
☞ www.integration-nw.ch

➜ முகவரிப் பட்டியல்

☞ www.info-merkblatt.ch
☞ www.local.ch
☞ www.nw.ch > Online-Schalter > Rat und Hilfe

Bahn, Busse und Schiffe in der ganzen Schweiz zum reduzierten Preis benützen.

☞ www.passepartout.ch
☞ www.sbb.ch

➜ Auto/Motorrad

Einen ausländischen Führerausweis müssen Sie innerhalb eines Jahres nach dem Einreisedatum in einen Schweizer Führerausweis umtauschen. Falls Sie ein Fahrzeug im Ausland besitzen und dies in die Schweiz importieren möchten, so haben Sie nach dem Einreisedatum ein Jahr Zeit, das Fahrzeug umschreiben zu lassen. Weitere Informationen und die notwendigen Formulare erhalten Sie im Verkehrssicherheitszentrum.

✉ info@vsz.ch, ☞ www.vsz.ch

➜ Carsharing

Carsharing ist die organisierte gemeinschaftliche Nutzung eines oder mehrerer Autos. Fahrzeuge von Carsharing-Organisation finden Sie in der ganzen Schweiz. Grösster Anbieter ist Mobility mit über 2900 Fahrzeugen.

☞ www.mobility.ch

➜ Fahrradsharing

In vielen Nidwaldner Gemeinden stehen Ihnen Fahrräder zum Ausleihen zur Verfügung. Sie müssen sich über die «Nextbike»-App registrieren, die Ausleihe kostet CHF 2 pro Stunde.

☞ www.nextbike.ch

ADRESSEN UND NOTFALLNUMMERN

➜ Notfallnummern

Polizei	✆ 117/112
Feuerwehr	✆ 118/112
Sanitätsnotruf	✆ 144
Vergiftungsnotfälle	✆ 145
Rettungshelikopter REGA	✆ 1414

➜ Adressen

Gesundheitsförderung und Integration
Marktgasse 3, 6371 Stans
✆ 041 618 75 90
✉ gfi@nw.ch
☞ www.gfi.nw.ch
☞ www.integration-nw.ch

➜ Adressverzeichnisse

☞ www.info-merkblatt.ch
☞ www.local.ch
☞ www.nw.ch > Online-Schalter > Rat und Hilfe

Gesundheitsförderung und Integration
Marktgasse 3, 6371 Stans
✆ 041 618 75 90
✉ gfi@nw.ch
☞ www.gfi.nw.ch
☞ www.integration-nw.ch

GESUNDHEITS FÖRDERUNG & INTEGRATION NIDWALDEN

KIP KANTONALE INTEGRATIONSPROGRAMME

19-03-20-KNW-INFOBROSCHÜRE-TA

TRIART.CH